**பதவிய பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 02 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 242,590 தொகையான உபகரணங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 95 ஏக்கர் பரப்பளவிலான 19 மயானங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 07 மயானங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 2,003,810 ஆன செலவினமும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 166,071 பெறுமதியான 150 கல்வனைஸ் குழாய்கள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அந்த கல்வனைஸ் குழாய்கள் சபை உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது புறநெகும செயற்திட்டத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 433,280 தொகையான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கு வழங்கப்பட்டிருந்த WPLL-2109 ஆம் இலக்க நீர் பவுசர் மற்றும் NCRD 2739 ஆம் இலக்க டிராக்டர்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீண்டகாலமாக நிதிக்கூறறுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற ரூபா 259,069 ஆன இருப்பு பெறுமதிக்குரிய பௌதீக இருப்புக்கள் சபையிடம் காணப்படவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,325 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,002,672 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம்

சபையினால் பராமரிக்கப்படும் நீதிமன்றத் தண்டப் பண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரை கிடைக்க வேண்டிய ரூபா 773,018 ஆன நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைக்க வேண்டிய ரூபா 203,000 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபையில் சேவை புரிந்து இடமாற்றம் பெற்றுச் சென்று மரணித்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 47,666 தொகையான ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையால் பராமரிக்கப்படுகின்ற மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 21.5 ஏக்கர் பரப்பளவிலான காணிகளின் தற்போதைய பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன், உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இலக்கம் 03 இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2005 நவம்பர் 08 ஆந் திகதிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் PL/07/01/53 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கையின் 06 இலக்கத்தின் 2.2(iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சபையினால் தொடர்ச்சியாக செயற்படுத்தும் வீதி பராமரிப்பு முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கிவல்லை.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக காணப்படும் கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற சொத்துக்கள்

(i) சபைக்குச் சொந்தமாக காணப்படும் ரூபா 1,319,050 WPLE 7506 ஆம் இலக்க கெப் வண்டி ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாமல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரிசிமாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்திகளைப் பிரசித்திப்படுத்துவதற்காக ரூபா 814,000 தொகையான உபகரணங்கள் வடமத்திய தலைமை அமைச்சினால் 2007 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சபையினால் அவ்வியந்திரங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2016 மார்ச் மாதம் வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பதவிய பிரதேச செயலாளரால் நன்கொடையாக சபைக்கு வழங்கப்பட்டிருந்த 17 மீன்பிடிப் படகுகள் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை செயற்படுத்துவுதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 6,237,878 தொகை செலவு செய்து பதவிய அலி வங்குவ பிரதேசத்தில் பிளிசரு செயற்திட்ட நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மே மாதம் வரையிலும் உரிய நோக்கங்களுக்காக அக்கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
பதவிய கிரவேல் கந்த பிரதேசத்தில் 01 ஏக்கர் அளவிலான திறந்த காணியில் கழிவுப்பொருட்களை இடுவதன் காரணமாக சுற்றாடல் சிக்கல்கள் தோன்றியிருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்